1967 ஜூலை 17]

THIRU K. VINAYAKAM : Are the Executive Officers of temples paid any extra remuneration for doing this extra work ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** ஏற்கனவே கோவில்களில் இதுபோன்ற திருமணங்கள் நடத்தப்படுவதற்கு ரசீது கொடுத்து வந்தார்கள். அது ரிஜிஸ்தர் செய்வதற்கு அனுமதி இல்லாமல் இருந்தது. இப்போது அதற்கான விதி பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அது சட்டபூர்வமாக ரிஜிஸ்தர் செய்யப்படும்.

### மத்திய சிறை இடமாற்றம்.

* 383 வினா :—**திரு. மா. பா. சாரதி :** மதிப்பிற்குரிய சட்ட—கூட்டுறவுத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மத்திய சிறைச்சாலையை நகருக்கு வெளியே மாற்றத் திட்டமிடப்பட்டுள்ளதா ?

(இ) ஆம் எனில், எப்பொழுது முதல் அமல்படுத்தப்படும் ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** (அ) ஆம்.

(இ) நிதி இடர்ப்பாடு நிலை நீங்கியதும், இச்சிறைச்சாலை வேறு இடத்திற்கு மாற்றப்படும்.

DR. H. V. HANDE : Will the Ministry take up the work as early as possible and help the Health Ministry to have additional accommodation for the extension of the General Hospital ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இதற்கு மொத்தம் 201 ஏக்கர் 80 செண்ட் வேண்டுமென்று கோரப்பட்டது. 107 ஏக்கர் ஒரு செண்ட் கிடைத்திருக்கிறது. இதற்கு ஒரு கோடிக்கு மேல் தேவைப்படுவதால் இதைத் தொடர்ந்து பரிசீலித்து நிதி வசதிக்கு ஏற்ப நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும்.

### கூட்டுறவுச் சங்கங்கள்

* 384 வினா—**திரு. எஸ். ஜே. ராமசாமி :** மதிப்பிற்குரிய சட்ட—கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

நமது மாநிலத்தில் உள்ள பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கைசெய்யும் கூட்டுறவு இலாகா தணிக்கையாளர்களை நிறுத்திவிட்டு அக்கௌண்டன்ட் ஜெனரல் ஆபீஸ் அலுவலர்களைக் கொண்டு தணிக்கை செய்யும் திட்டம் ஏதேனும் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** இல்லை. தமிழக அரசிடமிருந்து பெருமளவில் நிதி உதவி பெறும் கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை இலவசமாகச் சோதனை முறையில் தணிக்கை செய்வதற்கு மாநிலக் கணக்காளர் செயற்குறிப்பு அனுப்பியுள்ளார். அவருடைய செயற்குறிப்பு பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

**திரு. எஸ். ஜே. ராமசாமி :** இப்போது ஆடிட் பண்ணுவது முறையாக இல்லை. இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களை நல்லமுறையில் தணிக்கை செய்ய தனியாகவே ஒரு அதிகாரியைப் போட்டு அதைப் பரிசீலனை செய்வார்களா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** கூட்டுறவு இலாகாவில் தனியாகவே ஆடிட் விங் இருக்கிறது. அதன் தலைவராக அக்கவுண்டண்ட்-ஜெனரல் ஆபீஸில் இருந்து சீப் ஆடிட் ஆபீசர் போடப்பட்டிருக்கிறார். இதை எந்த முறையில் அமைக்கலாம் என்பது பரிசீலனையில் இருக்கிறது.